
பக்கங்கள் 17+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆனி 20 வெள்ளிக்கிழமை 04.07.2024 | அதிர்வு 335

## கணேமுல்லவின் நெருங்கிய சகா சுட்டுக்கொலை!



ராகம, படுவத்தைப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# தேரின் கலசம் கழன்று வீழ்ந்ததில் பெண் ஒருவர் பரிதாப உயிரிழப்பு

## முள்ளிவாய்க்காலில் இன்று துயரம்

(ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்)

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் கிழக்கு குருந்தடி பிள்ளையார் ஆலயத்தின் தேர்த் திருவிழாவில் தேரில் இருந்த கலசம் கழன்று வீழ்ந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று இடம்பெற்றுள்ளது.

முள்ளிவாய்க்கால் கிழக்கு குருந்தடி பிள்ளையார் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று நடைபெற்றபோது தேர் வீதி உலா வரும்போது தேரின் கலசம் மின் இணைப்பு வயரில் சிக்கி கழன்று வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது பெண் ஒருவர் உயிரிழந்துள் 04



# முன்னாள் அமைச்சர் சந்திரசேன கைது!



## ஜூலை 18 வரை விளக்கமறியல்

முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் கைது செய்யப்பட்டார்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது தனது அன்புக்குரியவர்களுக்கு 2 கோடி 50 இலட்சம் ரூபா பெறுமதியான சோளங்களை வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டார். 04

# செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட என்புத் தொகுதிகள் பாதுகாப்பாக யாழ்.பல்கலையில்

## சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவிப்பு

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

“யாழ்ப்பாணம் – செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து நேற்று வரை 40 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்ட 34 மனித என்புத் தொகுதிகள் யாழ். பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பாகப் பேணப்பட்டு வருகின்றன.”

– இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன் தெரிவித்தார்.

புதைகுழியில் இருந்து 04



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally





### பருத்தித்துறையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த

# இ.போ.ச. பஸ் சிலாபத்தில் மரத்துடன் மோதி விபத்து!

### 21 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்

(க.மகாதேவன்)

சிலாபம் – புத்தளம் வீதியில் தெதுறு ஓயா பாலத்துக்கு அருகில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 21 பேர் காயமடைந் துள் ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பஸ் விபத்து இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக் குச் சொந்தமான பஸ், வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மரத்தின் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற் றுள்ளது.

விபத்தில் 21 பேர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காகச் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். பருத்தித்துறையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த



இ.போ.ச. பஸ்ஸே இவ்வாறு விபத்துக் குள்ளா கியுள்ளது. இந்த விபத்து தொடர் பான மேலதிக விசாரணைகளைப் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வடமராட்சி கிழக்கு மாமுனையில் 83 கிலோ கேரளா கஞ்சா மீட்பு!

யாழ்ப்பாணத்தில் சுமார் 83 கிலோ கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு மாமுனை பகுதி யில் கேரளா கஞ்சா கடத்தப்படுவதாக இன்று அதிகாலை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து சம்பவ இடத்துக்குப் பொலிஸார் விரைந்த போது, சந்தேக நபர்கள் அவ் விடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளனர்.

அதனை அடுத்து அப்பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 38 பொதிகளில் பொதியிடப்பட்ட நிலையில் சுமார் 83 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்ற சந்தேக நபர்களைக் கைது செய்ய மருதங்கேணி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள் ளனர்.





# காத்தான்குடியில் இடம்பெற்ற விபத்தில் 17 வயதுச் சிறுவன் ஒருவர் உயிரிழப்பு!

இன்று அதிகாலை காத்தான்குடியில் இடம்பெற்ற விபத்தில் 17 வயதுச் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காத்தான்குடி கடற்கரை வீதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் காத்தான்குடியை சேர்ந்த முஹம்மட் (17) என்ற சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

காத்தான்குடி கடற்கரை வீதியூடாக மோட்டார் சைக்கிளில் அதிவேகமாகப் பயணித்துக் கொண்டிருந்த சிறுவன் செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி வீதியோரமிருந்த மின்சாரத் தூணுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த நிலையில் படுகாயமடைந்த சிறுவன் காத்தான்குடி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்த சிறுவனின் சடலம் காத்தான்குடி ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது விபத்து தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன் னெடுக்கின்றனர்.

# கடந்த 6 மாத காலப் பகுதியில் நாட்டில் 62 சூட்டுச் சம்பவங்கள்

## பொலிஸ் தலைமையகம் தகவல்

2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப் பகுதிக்குள் நாட்டில் 62 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களினால் 34 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவற்றில் 44 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலக கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, நேற்று மாத்திரம் நாட்டில் மூன்று துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.




அதன்படி, கந்தானை பொதுச் சந்தைக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அத்துடன், நீர்கொழும்பு – துன்கல்பிட்டிய பிரதேசத்தில் நேற்று பிற்பகல் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மேலும், ராகதை, படுவத்தை பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்ட பாதாள உலக கும்பலின் தலைவரான "கணேமுல்ல சஞ்சீவ"வின் நெருங்கிய நண்பரான "அமி உப்புல்" என்பவர் உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## கணேமுல்லவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஓட்டோவில் வந்த இரண்டு துப்பாக்கிதாரிகள், பிஸ்டல் வகை துப்பாக்கியால் மேற்படி நபரைச் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

படுவத்தை கிராம அபிவிருத்தி மாவத்தையில் அமைந்துள்ள வீடொன்றைக் குறிவைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர், அண்மையில் கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் வைத்துச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த 'கணேமுல்ல சஞ்சீவ' என்பவரின் நெருங்கிய கூட்டாளியான 'ஆர்மி உபுல்' என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் மற்றும் துப்பாக்கிதாரிகளின் அடையாளம் குறித்து இதுவரை உறுதியான தகவல்கள் வெளியிடப்படவில்லை.

# காணாமல்போன பிரபல வர்த்தகர் குப்பையில் இருந்து சடலமாக மீட்பு!



நான்கு நாட்களாகக் காணாமல் போயிருந்த பிரபல வர்த்தகர் ஒருவர் புத்தளம் – வென்னப்புவை, சிறிகம்பொல பிரதேசத்தில் உள்ள வாகனங்களைப் பழுது பார்க்கும் நிலையம் ஒன்றின் குப்பைக் குழியில் இருந்து நேற்று வியாழக்கிழமை பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று வென்னப்புவை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீடகப்பட்டவர் புத்தளம் – மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய வர்த்தகர் ஆவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய வர்த்தகர் ஒருவர் கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதியில் இருந்து காணாமல்போயுள்ளார் என்று வென்னப்புவை பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், காணாமல்போன வர்த்தகரின் கார் வென்னப்புவை பிரதேசத்தில் உள்ள வர்த்தகரின் நண்பனின் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

வர்த்தகரின் நண்பனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி இரவு வர்த்தகரும் அவரது 5 நண்பர்களும் மதுபானம் அருந்திக்கொண்டிருந்த போது வர்த்தகருக்கும் நண்பர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறில் வர்த்தகர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

பின்னர் நண்பர்கள் அனைவரும் இணைந்து வர்த்தகரின் சடலத்தை வென்னப்புவை, சிறிகம்பொல பிரதேசத்தில் உள்ள வாகனங்களைப் பழுது பார்க்கும் நிலையம் ஒன்றின் குப்பை குழியில் வீசியுள்ளதாக வர்த்தகரின் நண்பனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்துக் கைது செய்யப்பட்ட நண்பனை மாரவில நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேகநபர்களைக் கைது செய்வது தொடர்பில் வென்னப்புவை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இது தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் இன்று முற்பகல் முன்னிலையாகியிருந்த போது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளின் பின்னர் சந்திர சேனவைக் கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தில் இன்று பிற்பகல் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் முன்னிலைப்படுத்தினர்.

அவரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு புதுக்கடை நீதிமன்றம் உத்தரவிட்டது.

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகழ்ந்து எடுக்கப்பட்ட பாடசாலைப் புத்தகப் பை, பொம்மை, காலணி, சிறு வளையல் போன்ற பொருட்கள் நீதிமன்றக் கட்டுக் காவலில் சான்றுப் பொருட்க ளாகப் பாதுகாப்பாகப் பேணப்பட்டு வரு கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

செம்மணிப் புதைகுழி வழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன் ஊடகங்களுக்குக் கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் முதற்கட்ட அகழ்வுப் பணிகள் மூன்று நாட்கள் இடம்பெற்ற வேளையில் மழை காரணமாக நிறுத்தப்பட்டு பின் ஆறு நாட்கள் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றிருந்தன. அதன் பின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் தொடர்ச்சியாக 8 நாட்களாக இடம்பெற்று வருகின்றன. மொத்தமாக நேற்று வரை 17 நாட்கள் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து நேற்று வரை 40 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்ட 34 மனித என்புத் தொகுதிகள் நீதிமன்றக் கட்டுக்காவலில் எடுக்கப்பட்டு சட்ட வைத்திய அதிகாரி பிரணவனிடம் கையளிக்கப்பட்டன.

இவ்வாறு கையளிக்கப்பட்ட என்புத் தொகுதிகள் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட சட்ட வைத்தியத்துறையில் உள்ள என்பு ஆய்வு கூடத்தில் பாதுகாப்பாகச் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட பாடசாலை புத்தகப் பை, பொம்மை, காலணி, சிறு வளையல் போன்ற பொருட்கள் நீதிமன்றக் கட்டுக்காவலில் சான்றுப் பொருட்களாகப் பாதுகாப்பாகப் பேணப்பட்டு வருகின்றன.

தற்போது அகழ்வுப் பணிகள் மாத்திரமே இடம்பெற்று வருகின்றன. எந்தப் பொருட்களையும் ஆய்வு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. முழுமையாக அகழ்வுப் பணிகள் நிறைவு பெற்றதன் பிற்பாடே மனித என்புத் தொகுதிகள் சட்ட வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினரால் ஆய்வு செய்யப்படும். அதன்பின்னர் இறப்புக்கான காரணம், மீட்கப்பட்ட குறித்த என்புத் தொகுதிகள் ஆணா, பெண்ணா மற்றும் வயது என்பன அறிவிக்கப்படும்.

மேலும் ஆகழ்வுகள் முடிவுற்ற பின் கிடைக்கப் பெற்ற பிற சான்றுப் பொருள்களின் கால எல்லையைத் தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ் சோமதேவா வெளிப்படுத்துவார்.

மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட பகுதியில் கண்காணிப்புக் கமரா பொருத்தப்பட்டுள்ளது. யாழ். பொலிஸார் 24 மணிநேரமும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

மேலும் காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணியும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணிகளும் இந்த விடயங்களில் அக்கறை செலுத்தி தொடர்ந்தும் நீதிமன்றத்தில் ஆஜராகி வருகின்றோம்.” என்றார்.

## தேரின் கலசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதுடன் மற்றுமொரு பெண் படுகாயமடைந்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 55 வயதான சங்கரப்பிள்ளை சசிகலா என்ற பெண்ணே இதன்போது உயிரிழந்துள்ளார்.

அவரின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த பெண் சிகிச்சைக்காக மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த உயிரிழப்பு சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவ இடத்துக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன் சென்று பார்வையிட்டார்.

### எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி

# கிழக்கு மாகாணத்துக்கான மாபெரும் வர்த்தகக் கண்காட்சி

### மட்டு. வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத் தலைவர் செல்வராஜா தெரிவிப்பு

(வாலகிருஸ்ணா)

கிழக்கு மாகாணத்தில் உள்ள உற்பத்தியாளர்கள் நவீன தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொள்ளும் வகையிலும் புதிய நவீன உற்பத்தியாளர்களை உருவாக்கும் நோக்குடனும் உற்பத்தியாளர்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலும் கிழக்கு மாகாணத்துக்கான மாபெரும் சர்வதேச வர்த்தக கண்காட்சி மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்த கண்காட்சி மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்தின் தலைவர் தொழிலதிபர் மு.செல்வராஜா தெரிவித்தார்.



எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரையில் இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

இவற்றில் வீடமைப்பு, கட்டுமானம், மின்சக்தி, எரிசக்தி, தொழில்துறை இயந்திரங்கள், கருவிகள், விவசாயம், கல்வி மற்றும் சுகாதாரம் ஆகியன உட்பட உற்பத்தியாளர்கள், தொழில்துறைசார்ந்தவை காட்சிப்படுத்தப்படவுள்ளன என்ற அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள தொழில்துறையையும் வர்த்தக துறையையும் வலுப்படுத்தும் கண்காட்சியாக இதனை நடத்தவுள்ளனர்.

நவீன தொழில் நுட்பங்களைக் கொழும்புக்கும் வெளிநாடுகளுக்கும் சென்று பெற்றுக் கொள்வதற்கு பதிலாக ஒரே இடத்தில் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இன்று உலகில் பல்வேறு நவீன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றை மட்டக்களப்பு மாவட்டத்துக்குக் கொண்டு வந்து விவசாயத்துறை, கட்டடத்துறை, மீன்பிடித்துறை உட்பட பல்வேறு துறைசார்ந்த நவீன இயந்திரங்களை மட்டக்களப்புக்கு கொண்டுவந்து தொழில் துறை சார்ந்தவர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் தலைவர் செல்வராஜா இதன் போது தெரிவித்தார்.



# வவுனியாவில் ஹயஸ் மோதி வயோதிபர் பரிதாப மரணம்

(கி.வசந்தன்)

வவுனியாவில் ஹயஸ் ரக வாகனம் மோதி வயோதிபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

வவுனியா – யாழ். வீதியில் புதிய பஸ் நிலையத்துக்கு அண்மையில் இன்று காலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.


இந்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த ஹயஸ் ரக வாகனம் வவுனியா – யாழ். வீதியில் புதிய பஸ் நிலையம் முன்பாக சென்று கொண்டிருந்த போது வீதியில் சைக்கிளில் பயணித்த வயோதிபருடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

விபத்தில் படுகாயமடைந்த வயோதிபர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

விபத்து தொடர்பாக வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





2012- 2019 வரையான காலப்பகுதியில் சிறிய நீர்பாசனக் குள அபிவிருத்தி வேலைகளில் ஏற்பட்ட முறைகேடுகள் தொடர்பான விசாரணை

மேற்படி விடயம் தொடர்பாக எமது சம இலக்க 11.04.2025ம் திகதிய கடிதத்திற்கு மேலதிகமதாக

2025.01.28ம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாகவும் கௌரவ வடமாகாண ஆளுநர் அவர்களின் பணிப்பிற்கு அமைவாகவும் நியமனம் செய்யப்பட்ட விசாரணைக்குழுவில் தாங்கள் தலைவர்/அங்கத்தவர் ஆக நியமிக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை அறியத் தருவதுடன் மேற்படி விசாரணையை மேற்கொண்டு அதன் விசாரணை அறிக்கையினை விரைவாக எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

க.கனகேஸ்வரன்
மாவட்டசெயலாளர்/அரசாங்க அதிபர்
மன்னார் மாவட்டம்.

க. கனகேஸ்வரன்
மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்
மன்னார் மாவட்டம்.

பொது தொ.பெ General T.P 023 2222234 | மேலதிக அரசாங்க அதிபர் Addl.Govt.Agent 023 2222236 | பிரதம கணக்காளர் Chief Accountant 023 2222214 | திட்டமிடல் பணிப்பாளர் Planning Director 023 2222283 | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் Chief Internal Auditor 023 2222215 | நிர்வாக அலுவலர் Administrative Officer 023 2222213

# மன்னாரில் குளப் புனரமைப்பில் நிதி மோசடி: ஐவர் கொண்ட விசாரணைக் குழு நியமனம்

(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டத்தில் 2016 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் மேற்கொண்ட 42 குளப் புனரமைப்பில் நிதி மோசடி இடம்பெற்றதான குற்றச்சாட்டையடுத்து விசாரிக்கை மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் கீழ் உள்ள கமநல சேவைத் திணைக்களத்தின் ஊடாக 42 குளங்கள் புனரமைக்க நிதி பெறப்பட்டு மாகாண சபையின் ஊடாக அந்தப் பணிகள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு இடம்பெற்ற பணியில் ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாகச் செலவு செய்யப்பட்டபோதும் அதற்கேற்ப பணிகள் இடம்பெறாது மோசடி இடம்பெற்றதான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டு மாவட்ட செயலகத்தின் ஊடாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் பிரஸ்தாபிக்கப்பட்டதோடு விசாரணை நடத்த வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானத்துக்கு அமைய மாவட்ட உள்ளகக் கணக்காய்வாளர் யூட் வோல்டன் தலைமையில் ஐவர் கொண்ட குழு ஒன்று மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரனால் நியமிக்கப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது.

# யாழ்ப்பாணத்தில் நாளை தொழில் வாய்ப்பு முகாம்




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்ட இளைஞர், யுவதிகளின் தொழில் வாய்ப்புக் கனவை நனவாக்கும் முகமாக நாளை சனிக்கிழமை மாபெரும் தொழில் வாய்ப்பு முகாம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும் குறித்த தொழில் முகாமில் 30 நிறுவனங்கள் தமது நிறுவனங்களின் வெற்றிடங்களை நிவர்த்தி செய்வதற்கான எதிர்பார்ப்புடன் பங்கேற்கவுள்ளதாக ஏற்பாட்டாளர் விக்னேஸ்வரன் ஐங்கரன் யாழ். ஊடக அமையத்தில் இன்று தெரிவித்தார்.

ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பை நடத்திய அவர் மேலும் கூறுகையில்,

"பல தொழில் சந்தைகள் நடைபெற்றாலும் இம்முறை நடைபெறும் தொழில் வாய்ப்பு முகாம் பெரும் வரப்பிரசாதமாக அமையும் என நம்புகின்றோம்.

இந்த முகாம் ஊடாக முதற்கட்டமாக 150 இளைஞர், யுவதிகளுக்கு உடனடி வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

ஆயிரத்துக்கும் அதிகமான தொழிலை எதிர்பார்போர் வருகை தரவுள்ளனர்." – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நீண்ட காலப் பணி

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் இப்போது அதிகம் பேசப்படுகின்றது. தமிழர் தேசிய அரசியலிலும், இலங்கை தேசிய அரசியலிலும் தேர்தலோ பிற விடயங்களோ இப்போது தாக்கம் செலுத்தக்கூடியவையாக - முக்கியத்துவம் பெறக் கூடியவையாக - இல்லாத நிலையில், இன்றைய நிலைமையில் இந்த விவகாரம் முனைப்புப் பெற்றிருக்கின்றது. சூடு கிளப்புகின்றது. அவ்வளவுதான்.

ஆனால், செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு தொடர்பாக இப்போது காட்டப்படும் ஈடுபாடும், கவனிப்பும், தீவிரமும், முக்கியத்துவமும் அது முடிவை எட்டும் வரை தொடருமா என்பது சந்தேகம்தான்.

ஏனெனில் இத்தகைய புதைகுழி அகழும் விவகாரம் யாழ்ப்பாணத்துக்குப் புதியதல்ல. அவ்வப்போது புதைகுழிகள் அகலப்படுகின்ற போது ஆரவாரமாக செய்திகள், விவகாரங்கள் பகிரங்கமாகும். முக்கியத்துவம் கொடுக்கப்படும். தீவிரம் காட்டப்படும். உண்மைகள் கண்டறியப்படுவது போன்ற தோற்றப்பாடு வெளிப்படுத்தப்படும். ஆனால் முடிவில் பெரும்பாலும் பெறுபேறு பூஜ்ஜியமாகவே நீடிக்கும்.

செம்மணியில் மனிதப் புதை குழி அகழப்படுவது இப்போது முதல் தடவை அல்ல. சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னரும் இப்படிச் செய்தார்கள். அந்த விவகாரம் - அப்போது மீட்கபட்ட பதினைந்துக்கும் மேற்பட்ட எலும்புக் கூடுகள் சம்பந்தமான விடயம் - தற்போது கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆழ்ந்த தூங்கத்தில் கிடக்கிறது.

செம்மணியில் நானூறுக்கும் மேற்பட்டவர்கள் புதைக்கப்பட்டார்கள் என்ற செய்தியை கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வன்புணர்வு மற்றும் அவர் குடும்பத்தவர்களோடு அவர் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட வழக்கின் பிரதான எதிரிகளின் ஒருவரான லான்ஸ்கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்தமை பற்றி இப்போது கூறப்படுகின்றது. அதன் அடிப்படையில்தான் செம்மணிக்கு இப்போது முக்கியத்துவம் கொடுக்கப்ப டுகின்றது.

இதில் ஒரு விடயம் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டும். செம்மணியில் பல நூற்றுக்கணக்கானோர் புதைக்கப்பட்டனர் எனக் குறிப்பிட்டு சோமரத்ன ராஜபக்ஷ சுட்டிக்காட்டிய இடம் யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி பக்கம் நோக்கி கண்டி வீதியில் செல்லும் போது, 'யாழ்ப்பாணம் வரவேற்கின்றது' என்ற வளைவுக்கு பக்கத்தில் - ஆரம்ப காலம் முதல் இருந்த சிறிய கோயிலை அண்டி வீதியின் வலப்புறத்தில் இருந்தது.

இப்போது சிந்துபாத்தி மயானத்தில் புதைகுழி தோண்டப்படும் இடம் வீதிக்கு இடது புறத்தே உள்ளது.

அதேசமயம் கிருஷாந்தி குமாரசாமி மற்றும் உறவினர்களின் புதைகுழி கண்டி வீதியிலிருந்து பிரிந்து செம்மணி வீதியில் சென்றால் சுமார் நூறு மீட்டர் தள்ளி செம்மணி வீதியின் வலது புறத்தில் (இப்போது தோண்டப்படும் மனிதப் புதைகுழி செம்மணி வீதியின் இடது புறத்தில்) உள்ளது.

இவற்றை நோக்கும் போது, செம்மணியில் அந்தப் பெரும் பிரதேசத்தில், பரந்து கிடக்கும் பல்லாயிரம் ஏக்கர் தரவை நிலத்துக்குள் தூரத் தூர பல இடங்களில் தமிழ் மக்கள் புதைக்கப்பட்டு இருப்பார்கள் என்பது புலனாகின்றது.

ஆகையால் இந்தப் பணி குறுகியதல்ல. இப்போது தோண்டப்படும் மனிதப் புதைகுழி அதன் சட்ட, புலனாய்வு மற்றும் தொழில்நுட்பக் காரணங்களுக்காக மிகவும்மந்தமாகவேமுன்னெடுக்கப்பட வேண்டிய நிலை உள்ளது. அடுத்த இரண்டு, மூன்று மாதங்களில் மழை காலம் வந்து விட்டால், அகழ்வு பணி மாதக்கணக்கில் தடைப் படக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உண்டு.

ஆகையால் அகன்று, விரிந்து, பரந்த பிரதேசத்தில் பல்வேறு இடங்களில் நீண்ட காலம் பிடிக்கக் கூடிய இந்த பணியை முழுமையாக செய்து முடிக்கும் அரசியல் பற்றுறுதியும், திடசங்கற்பமும் தமிழர் தரப்புக்கு இருக்கின்றனவா, அதற்கான ஒத்துழைப்பை தந்து உண்மைகளைவெளிப்படுத்துவதற்கான அரசியல் துணிச்சல் இந்த அரசுக்கு உண்டா என்பவை எல்லாம் காலகதியில்தான் தெரியவரும்.



# "கிளீன் ஸ்ரீலங்கா" வேலைத்திட்டத்தில் விழிப்புணர்வு தெருநாடகம் உடப்பில்

(உடப்பு க.மகாதேவன்)

"கிளீன் ஸ்ரீலங்கா" வேலைத்திட்டத்தின் கீழ் உடப்பு தமிழ் மகா வித்தியாலயம் ஏற்பாடு செய்த விழிப்புணர்வு தெரு நாடகம் உடப்பு ஆலய அரங்கு அருகாமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் பூ.சுகந்தன் தலைமையில் நடைபெற்றது.

வீதிகளில் காணப்படும் பொலித்தீன் பாவனையைத் தடுத்தல் மற்றும் புகைத்தல் போன்றவற்றை தடுப்பத்து எவ்வாறு என்பதை உணர்த்தும் விதமாக இது அமைந்திருந்தது.

அத்துடன் இது சம்பந்தமான நாடகம் ஒன்றும் உயர்தர மாணவர்கள், எட்டாந் தர மாணவர்களால் நடித்தும் காட்டப்பட்டது. இதில் ஆ.திருவரங்கநாதன், க.ஸ்ரீஸ்கந்தராஜா ஆகிய ஆசிரியர்கள் மற்றும் உடப்பு பொலிஸ் நிலைய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.



# உகந்தை கோவில் வளாகத்தில் மரைகளுக்குப் பெரும் அச்சுறுத்தல்



(பாறுக் ஷிஹான்)

உகந்தை கோவில் வளாகத்தில் தேங்கியுள்ள பிளாஸ்டிக் குப்பை கூழங்களால் அங்கு காணப்படும் மரைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் தொன்மை வரலாறு கொண்ட உகந்தை முருகன் ஆலய வளாகத்தை சுற்றி அதிகளவான மரைகள் காணப்படுகின்றன.

இந்த மரைகள் அந்தச் சூழலில் உள்ள புற்கள் மேய்தல் மற்றும் தண்ணீர் தேவைக்காகவும் ஆலய வளாகத்துக்கு வருகை தருகின்றன.

எனினும் தற்போது பக்தர்களின் தான்தோன்றித்தனமான செயற்பாட்டினால் ஆலய வளாகத்தை சூழ பிளாஸ்டிக் பொருள்களுடன் குப்பை கூழங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

இந்த குப்பைகள் உரிய முறையில் அகற்றப்படாமையால் அங்கு வரும் மரைகள் அந்தக் குப்பைகளை உண்பதை அவதானிக்க முடிவதுடன் அவற்றின் உயிருக்கும் இந்தப் பிளாஸ்டிக் பொருள்களால் அச்சுறுத்தல் எற்பட்டுள்ளன.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் உரிய நடடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.







# உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் ‘விலங்கை உடைத்து’ நூல் அறிமுகம்!

(எஸ்.நிதர்ஷன்)

khkdpju; cணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் தன்வரலாறு “விலங்கை உடைத்து” என்னும் நூல் அறிமுக விழாவும் தமிழீழ எழுச்சிப் பாடல்கள் இசை நிகழ்வும் லண்டனின் கிரீன்போர்ட் (புசநநகெழசன)பகுதியில்பிரம்மாண்டமாக நடைபெற்றது.

மெய்வெளி வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த விழாவில் பிரித்தானிய மூத்த நாடாளுமன்ற உறுப்பினரான ஜோன் மக்டொனெல் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

மாநகர முதல்வர்கள், உள்ளூராட்சித் தலைவர்கள், கல்வியாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், முன்னாள் போராளிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

உலகெங்கும் வாழும் மூத்த தலைவர்கள் மற்றும் கல்வியாளர்களின் காணொலி மூல வாழ்த்து செய்திகளுடன் அதிதிகள் வரவேற்கப்பட்டு, மங்கள விளக்கேற்றலுடன் விழா இனிதே ஆரம்பமானது.

நிகழ்வின் சிறப்பு அதிதிகளான போற்றுதலுக்குரிய கிறொளளி மாநகர முதல்வியாகிய சர்மிளா சிவராஜா , போற்றுதலுக்குரிய சவுத்கோல் மேற்கு பிரதி மாநகர முதல்வராகிய படுமா மொகமெட், விசேட விருந்தினர்களான உள்ளூராட்சித் தலைவர்கள் தயா இடைக்காடர், குகா குமரன் , ஜோன் பால், அமர்ஜிற் ஜம்மு, சீமா குமார், டாறிக் முகமட், மொகின்டர் மித்தா, ஐய்ஷா றாசா, சுரிண்டர் ஹ்ஹுீர் ஜச்சல், கிரகம் வில்லியம்சன், டீ மார்டின், வர்லினி அலேக்சாண்டர், சசி மயில் வாகனம் , முரளி குணராஜா ஆகியோர் மங்கள விளக்கை ஏற்றி சம்பிரதாய பூர்வமாக விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தனால் எழுதி, கலைமாமணி வி.எல். மகாராஜனால் பாடப்பட்ட தமிழ் மொழி வாழ்த்து இசைக்கப்பட்டு, கலைமாமணி பிரேமலதா ரவீந்திரனின் நெறியாழ்கையில் நோவா லட்சுமிகாந்தனின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

அறிமுக நிகழ்வாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தை எழுத்துக்களாலும் கவிதைகளாலும் பாடல்களாலும் இன்றும் உயிர்ப்புடன் பயணிக்க வைத்திருக்கும் நூலாசிரியர் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் பற்றிய ஒரு ஆவணப்படம் ஒளிபரப்பப்பட்டது. விடுதலைப் போராட்டத்தில் அவரின் பங்களிப்பு, தியாகங்கள் மற்றும் தேசிய தலைவருடனான நெருக்கம் உட்பட பலரும் அறிந்திராத அரிய தகவல்களையும் ஆதாரங்களையும் உள்ளடக்கியதாக இது அமைந்திருந்தது.

விழாவை தலைமை தாங்கிய ஊடகவியலாளரும் மெய்வெளி இயக்குனர்களில் ஒருவருமான திருமதி பிரேமலதா சாம் பிரதீபனின் வரவேற்பு உரையை தொடர்ந்து, சிறப்பு அதிதிகளாக வந்திருந்த மாநகர முதல்வியாகிய சர்மிளா சிவராஜா மற்றும் பிரதி மாநகர முதல்வியாகிய படுமா மொகமெட் ஆகியோரின் உரைகள் இடம்பெற்றன.

தொடர்ந்து விழாவின் பிரதான நிகழ்வான நூல் அறிமுகம் இடம்பெற்றது. மெய்வெளி நிறுவுனர், மூத்த ஊடகவிலாளர், எழுத்தாளர், கலைஞர் என பன்முக ஆளுமைகளை கொண்ட சாம் பிரதீபன், கவிஞர் காசி ஆனந்தனின் “விலங்கினை உடைத்து” தன்வரலாற்று நூலை அறிமுகம் செய்து வைத்து சிறப்பு உரை நிகழ்த்தினார்.

அடுத்து சிறப்பு பேச்சாளர்களாக அழைக்கப்பட்டிருந்த தனிநாயகம் தமிழ் பாடசாலை அதிபரும் எழுத்தாளரும் இலக்கிய ஆர்வலருமான துரைசாமி சிவபாலன், பேர்ள் அமைப்பின் இடைக்



கால நிறைவேற்றுப் பணிப்பாளரும் லண்டன் சிட்டி பல்கலைக்கழக ஒப்பீட்டு அரசியல் உதவிப் பேராசிரியருமாகிய முனைவர் மதுரா இராசரட்ணம் ஆகியோர்நூல்பற்றிநயவுரைகளைவழங்கினர்.

பிரதம விருந்தினரான பிரித்தானிய மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் மக்டொனெல் முதல் பிரதியை வழங்கி வைக்க, தொழிலதிபரான ஜெராட் நிக்கஸ் பெற்றுக் கொண்டார்.

தமிழ் ஆசிரியர், கவிஞர், துசீசைவெ அச்சக உரிமையாளர் என பல் முகம் கொண்டவரான திரு பால ரவி அவர்கள் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் சாதனைகளை வியந்து கவிதை ஒன்றை வழங்கிதை அடுத்து விசேட விருந்தினராகிய கலைமாமணி தமிழ்இசை வேங்கை வு டு மகாராஜன் அவர்களின் சிறப்புரை இடம் பெற்றது.

அடுத்து மாமனிதர் காசி ஆனந்தனின் ஏற்புரை காணொலி மூலம் வழங்கப்பட்டது. இந்தியாவில் கடவுச்சீட்டு பறிக்கப்பட்ட நிலையில் இன்னும் வீட்டுக் காவல் கைதியாகவே வாழ்ந்துவரும் அவர், தான் அனுபவித்துவரும் துன்பங்களை எடுத்துக் கூறியதுடன், எந்த நிலை வரினும் தான் தமிழீழ விடுதலைக்கு போராடுவதை கைவிட போவதில்லை என்றும் சங்கல்பம் செய்தார். அத்துடன் சமகால அரசியல் நிலையை எடுத்துக்காட்டி, தமிழ் மக்கள் ஒன்றுபட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.












# இலங்கைக்கான ஈரானிய தூதரகத்துக்கு முஸ்லிம் சிவில் சமூக சேவை அமைப்பு!

இலங்கைக்கான ஈரானிய தூதரகத்துக்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு முஸ்லிம் சிவில் சமூக சேவை அமைப்பின் பிரதிநிதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை (01) விஜயம் செய்தனர்.

இதன் போது ஈரான் குடியரசின் தூதுவரை சந்தித்த முஸ்லிம் பிரதிநிதிகள் தாக்குதலுக்குள்ளான ஈரான் நாட்டின் நிலவரங்களையும், அங்குள்ள மக்களின் நிலைமைகளையும் கேட்டறிந்து கொண்டனர். அவர்களின் மன அமைதிக்கும் நிம்மதிக்கும் பிராத்திப்பதாக தெரிவித்திருந்தனர்.

இதன் போது அங்கு சென்றிருந்த, ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன், உப தலைவர் எம்.எப்.றிபாஸ், தேசிய அமைப்பாளர் இர்ஷாத் ஏ காதர், ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்சில் செயலாளர் எம்.ரீ.எம். றிஸ்வி, மற்றும் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் தலைவர் ஸாம் நவாஸ் ஆகியோர் ஈரான் இஸ்ரேல் மோதலின் போது ஈரானில் உயிரிழந்தவர்களுக்காக வைக்கப்பட்டுள்ள அனுதாப பதிவேட்டில் கையொப்பமிட்டு அனுதாபத்தையும் தெரிவித்தனர்.



# வடக்கு மாகாண பாடசாலைகளுக்கான மாபெரும் அரை மரதனோட்டப் போட்டி

## முல்லைத்தீவில் ஜுன் 6 ஆம் திகதி

(பா.சதீசன் )

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ள வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் வடமாகாண ரீதியிலாக மாபெரும் அரை மரதனோட்ட போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 6 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக இடம்பெறவுள்ளது.

மரதனோட்டத் துறைக்கு புத்துயிர் கொடுத்து வரும் முன்னாள் தேசிய மரதனோட்ட வீரர் கந்தசாமி பத்மநாதனின் முற்று முழுதான நிதி அனுசரணையில் தொடர்ந்து மூன்றாவது வருடமாகவும் இது இடம்பெறவுள்ளது.

16 தொடக்கம் 20 வயதுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான போட்டியாக இது இடம்பெறவுள்ளது.

அத்துடன் விசேடமாக மரதனோட்ட வீரர்களை வளப்படுத்தும் நோக்கோடும் சாதிக்க துடிக்கும் இளம் சாதனையாளர்களுக்குச் சிறந்த களங்களை வழங்கும் நோக்கோடும் 14 மற்றும் 15 வயது பாடசாலை மாணவர்களுககு 5 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட சிறிய வீதியோட்ட நிகழ்வாக இது இடம்பெறவுள்ளது.

போட்டியில் பங்குகொள்ள விரும்பும் போட்டியாளர்கள் குறித்த நாளில் காலை 5.30 மணியளவில் மருத்துவச் சான்றிதழுடன் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பதாக வருகை தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மன்னார் நகர சபையால் கடந்த காலங்களில்

# பண்டிகைக் காலத்துக்கு ஒதுக்கப்பட்ட வியாபார நிலையங்களில் ஊழல்!

### லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணை முன்னெடுக்க கோரிக்கை

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் நகர சபையால் கடந்த காலங்களில் பண்டிகை காலத்தை முன்னிட்டு வியாபார நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்ட வர்த்தக நிலையங்களில் பாரிய ஊழல் மோசடி இடம் பெற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை முன்னெடுக்க லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று மன்னார் நகர சபையின் தலைவர் டானியல் வசந்தன் தெரிவித்தார்.

மன்னார் நகர சபையில் நேற்று வியாழக்கிழமை (03) காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் நகர சபையால் கடந்த 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டுவரை பண்டிகை காலத்துக்கு என ஒதுக்கப்பட்ட வியாபார நிலையங்களில் ஊழல் இடம் பெற்றுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இன்று வியாழக்கிழமை (03) லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளேன்.

இந்த விடயங்கள் உரிய முறையில் விசாரணைக்கு உற்படுத்தப்பட்டு, மக்களின் பணம் திருடப்பட்டிருந்தால் இந்தப் பணம் மீள நகர சபைக்குக் கொண்டு வர வேண்டிய கடமைப்பாடு இருக்கிறது.

இவ்வாறு ஊழல் நடவடிக்கைகளில்




ஈடுபட்ட ஊழல் வாதிகளை, உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

மேலும் 2022 ஆம் ஆண்டு பண்டிகைக்கால வியாபரத்துக்கு என்று ஒதுக்கப்பட்ட கடைகளில் 31 கடைகள் ஏலம் இன்றி வழங்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பான உள்ளக விசாரணை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஊழல் மோசடி இன்னும் விசாரணையில் உள்ளமையால் லஞ்ச ஊழல் ஆணைக்குழு குறித்த விசாரணையைத் தமது பொறுப்பில் எடுத்து உடனடியாக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறான ஊழல் வாதிகளுக்கு தகுந்த தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும். மேலும் மன்னார் நகரில் 5 ஜீ டவர் அமைக்கும் விடயத்திலும் சூட்சுமமான முறையில் முறைக்கேடுகள் இடம் பெற்றுள்ளது.

குறித்த டவரில் மின் குமிழ்கள் அமைத்து தருவதாக கூறி நிர்வாகத்திடம் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும் குறித்த டவரில் 5 ஜீ தொழில் நுட்பம் இணைக்கப்பட்டுள்ளது.

உடனடியாக இந்த விடயம் தொடர்பாகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, அதற்கான தீர்வையும் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இந்த விடயங்கள் குறித்து லஞ்ச ஊழல் ஆணைக்குழு உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்து ஊழல்வாதிகளுக்குத் தகுந்த தண்டனையை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

பண்டிகைக்கால வியாபார நிலையங்களுக்கு இடம் ஒதுக்குவது தொடர்பில் கடந்த காலத்தில் குழு ஒன்று அமைக்கப்பட்டு, குறித்த குழுவின் ஊடாகவே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்தக் குழுவில் மன்னார் நகர சபையின் கணக்காய்வாளர், செயலாளர், கடந்த நகர சபை தலைவர், இரண்டு உறுப்பினர்கள் ஆகியோர் குறித்த குழுவில் செயற்பட்டனர்.

விசாரணைக்கு உட்படுத்த வேண்டியவர்கள் இவர்களாகத்தான் இருக்க வேண்டும். அவர்களுக்கு தெரியாமல் கடைகள் ஏலம் இன்றி வழங்கி இருக்க முடியாது.

இவர்களை விசாரணைக்கு உட்படுத்தும்போது இவர்களில் யார் ஊழல் மோசடியில் ஈடுபட்டுள்ளனர் என்பது தெரியவரும். – என்றார்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் அருளுரையும் உதவிகளும்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக ஆன்மீக அருளுரையாக “ஆயத்த மில்லை” என்ற தலைப்பில் அருளுரையை திருமதி சுதர்சன் அமுதகலா நிகழ்த்தினார்கள்.

உதவித் திட்டமாக, 97 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

காட்டுப்புலம்,கரவெட்டி பிரதேசத்தை சேர்ந்த யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில் தரம் 04 இல் கல்வி கற்கும் மாணவன், பத்தமேனி, அச்சுவேலி பிரதேசத்தை சேர்ந்த அச்சுவேலி மத்திய கல்லூரியில் தரம் 07 இல் கல்வி கற்கும் மாணவி ஆகியொருக்குச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இன்று (04) வெள்ளிக்கிழமை காலை





இந்த நிகழ்வு இடம்பெற்றது. சந்நிதியான் ஆச்சிரமத்தில்

**அருளுரையும் உதவிகளும்**

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக ஆன்மீக அருளுரையாக “ஆயத்த மில்லை” என்ற தலைப்பில் அருளுரையை திருமதி சுதர்சன் அமுதகலா நிகழ்த்தினார்கள். உதவித் திட்டமாக, 97 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

காட்டுப்புலம்,கரவெட்டி பிரதேசத்தை சேர்ந்த யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில் தரம் 04 இல் கல்வி கற்கும் மாணவன், பத்தமேனி, அச்சுவேலி பிரதேசத்தை சேர்ந்த அச்சுவேலி மத்திய கல்லூரியில் தரம் 07 இல் கல்வி கற்கும் மாணவி ஆகியொருக்குச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இன்று (04) வெள்ளிக்கிழமை காலை இந்த நிகழ்வு இடம்பெற்றது.



### ஒட்டுசுட்டானில் இராணுவத்தின் பிடியிலுள்ள

# பொதுமயானம், நீர்ப்பாசனத் திணைக்கள காணிகளை உடனடியாக விடுவியுங்கள்!

### விகரன் எம்.பி வலியுறுத்து; விரைவில் விடுவிக்கப்படுமென உத்தரவாதம்!





(பா. சதீசன் )

ஒட்டுசுட்டான் நகரை அண்டிய பகுதியில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள பொது மயானக் காணி மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு உரிய 25 ஏக்கர் காணிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் குறித்த காணிகளை விடுவிக்க அரசால் நடவடிக்கை எடுக்கப் படும் என்று ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரால் இதன்போது உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று (03) இடம்பெற்ற நிலையிலேயே இந்த விடயம் தொடர்பில் விவாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

ஒட்டுசுட்டானில் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு உரிய 25ஏக்கர் காணிகளையும், அதனோடு இணைந்த பொதுமயானத்தையும் இராணுவத்தினர் அபகரித்துள்ளனர்.

இந்த நிலையில் ஒட்டுசுட்டான் பகுதியிலுள்ள மக்கள் இறந்தவர்களின் உடலங்களை பேராறு பொது மயானத்துக்கு நீண்டதூரம் கொண்டு செல்ல வேண்டிய அவலநிலை காணப்படுகின்றது.

இவ்வாறாக பலவழிகளிலும் மாறி மாறி வரும் அரசுகள் எமது மக்களைத் தொடர்ந்தும் துன்பப்படுத்தும் நிலைமைகளே காணப்படுகின்றன.

இந்த நிலைமை மாற்றப்படவேண்டும். உடனடியாக ஒட்டுசுட்டான் நகர் பகுதியை அண்மித்துள்ள இராணுவமுகாம் அகற்றப்பட்டுப் பொது மயானக் காணி உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு உரிய 25ஏக்கர் காணிகளும் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும்.- என்றார்.

இதன்போது நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர் இதுதொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

ஒட்டுசுட்டான் சந்திப் பகுதியில் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு உரிய 25 ஏக்கர் காணிகளை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர்.

அந்தவகையில் தற்போது ஒட்டுசுட்டானில் இயங்கிவரும் நீர்ப்பாசன பிரிவு அலுவலகம் விவசாயத் திணைக்களத்துக்கு உரிய காணியிலேயே அமைக்கப்பட்டு இயங்கிவருகின்றது.

குறிப்பாக முன்னாள் முல்லைத்தீவு மாவட்ட பிரதிநீர்ப்பாசனப் பணிப்பாளர் ஸ்ரீஸ்கந்தராசா குறித்த நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு உரிய காணி விடுவிப்பு விடயத்தில் அதிக அக்கறையுடன் செயற்பட்டார்.

அந்தவகையில் தற்போது ஒட்டுசுட்டான் பகுதியில் அமைந்துள்ள நீர்ப்பாசனத் திணைக்கள பிரிவு அலுவலகம் அமைக்கப்படுவதற்கு முன்னர், உரிய இராணுவ அதிகாரிகளுடன் பேசி பிரதான வீதியுடன் அமைந்துள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு உரிய 25 ஏக்கர் காணிகளில் இருந்து முதற்கட்டமாக இரண்டுஏக்கர் காணிகளையாவது விடுவித்துத் தரும்படி கோரியிருந்தார்.

இவ்வாறாக கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அந்த நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு உரிய காணிகள் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை எனத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இராணுவத்தின் பிடியிலுள்ள பொது மயானக் காணி மற்றும், நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு உரிய காணி என்பவற்றை அரசால் விரைவில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.



# ஒக்டோபரில் ‘பட்ஜட்’ வரைவு; நவம்பரில் விவாதம் ஆரம்பம்

## டிசம்பரில் வாக்கெடுப்பு




2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் ஒதுக்கீட்டு வரைவை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை நவம்பரில் நடத்துவதற்கும், டிசம்பரில் இறுதி வாக்கெடுப்பை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது தேசிய கொள்கைச் சட்டத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ள முன்னுரிமைகள் மற்றும் கிராமிய அபிவிருத்தித் தொடக்க முயற்சிகளுக்கு முன்னுரிமையளிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

2026ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை 2025 ஒக்டோபர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதன் இரண்டாம் வாசிப்பை (வரவு செலவுத்திட்ட உரையை) 2025 நவம்பர் மாதத்தில் நடத்துவதற்கும், மூன்றாம் வாசிப்புத் தொடர்பான வரவு – செலவுத் திட்ட விவாதத்தை 2025 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நடத்தக் கூடிய வகையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.






# அன்றாட வாழ்வியலுடன் இரண்டறக் கலந்ததுதான் சைக்கிள் பயணம்...!

ஆசிய கலாச்சாரத்தில் சைக்கிள்களுக்கான இடம் என்றுமே புறக்கப்பட முடியாதது. அவை போக்குவரத்து வழிமுறையாக மட்டுமல்லாமல் அன்றாட வாழ்க்கையில் சமூக தொடர்புகளின் இரண்டறக் கலந்த பகுதியாகும். இவை பெரும்பாலும் தனிநபர், குடும்பப் பயணங்கள், தொழிற் தேவைகள் போன்ற சமூக நிகழ்வுகளில் இரண்டறக் கலந்துள்ளது.

இலங்கை இந்தியா பங்களாதேஷ் நேபாளம் போன்ற பொது போக்குவரத்து குறைவாக இருக்கும் நாடுகளின் கிராமப்புறங்களில் இதுவே முதன்மை வாகனமாகும்.

பல ஆசிய சமூகங்களில் சைக்கிள்கள் நடைமுறை மற்றும் கலாச்சார அடையாளத்தின் கலவை. சைக்கிள் சுற்றுச்சூழலுக்கு பல நன்மைகளை வழங்கும் ஒரு குறிப்பிடத்தக்க போக்குவரத்து முறையுமாகும். இது கார்பன் வெளியேற்றத்தைக் குறைக்கவும், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், காற்றின் தரத்தை மேம்படுத் தவும் உதவுகிறது, இது மோட்டார் வாகனங்களுக்கு சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றாக அமைகிறது.

குறைந்த தாக்கத்தை ஏற்படுத்தும் பயிற்சியாக, சைக்கிள் ஓட்டுதல் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத் துகிறது, மன நலனை மேம்படுத்துகிறது மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு பங்களிக்கிறது. மேலும் தோற்ற நோய்களாக அறியப்பட்டு எமது சமூ கத்தில் பெரும் தாக்கம் செலுத்தும் சர்க்கரை வியாதி, குருதிக் கொழுப்பு அதிகரித்தல், இதய நோய்கள், மூட்டு வலிகள் மற்றும் குறிப்பிடக்கூடிய சிலவகை புற்றுநோய் போன்றவற்றுக்குச் சைக்கிளோட்டுதல் ஒரு சிறந்த தீர்வாக அமைவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணத்தை மையப்படுத்தி இயங்கிக் கொண்டிருக்கும், ரைடர்ஸ் ஹப் சைக்கிள் கழகம் கடந்த ஒரு தசாப்தமாக சைக்கிள் ஓட்டுதலை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கு வகித்து வருகிறது. சைக்கிள் ஓட்டுநர்களிடையே சமூக உணர்வை வளர்க்கும் வழக்கமான பயிற்சி அமர்வுகள், ஆரோக்கியத்துக்கான குழு சவாரிகள் நிகழ்வுகளை இந்தக் கழகம் தினமும் தமது அங்கத்தவரிடையே ஏற்பாடு செய்கிறது. இதனால் அனைவருக்கும் சைக்கிள் ஓட்டுதல் எளிதாகக் கிடைக் கிறது. இந்தக் ககழகம் வளங்கள் மற்றும் ஆதரவை வழங்குவதன் மூலம் புதிய மற்றும் அனுபவம் வாய்ந்த உறுப்பினர்களை சைக்கிள் ஓட்டுதலில் ஈடுபட ஊக்கு விக்கிறது, இதன் மூலம் பிராந்தியத்தில் துடிப்பான சைக்கிள் ஓட்டுதல் கலாச்சாரத்தை வளர்க்கிறது.

எமது பிராந்திய சைக்கிளோட்டிகள் சாதாரண நியம சைக்கிள் பாவனையாளர்களாகவே உள்ளனர் ஆனால் உலக மாற்றத்தோடு ஒப்பிடுகையில் சாலை பைக்குகள் (சுழயன டிமைந) தான் சர்வதேச பந்தயத்தைப் பொறுத் தவரை செல்வாக்கு செலுத்தி வருகின்றன.

சாலை பைக்குகளுக்கும் நிலையான பைக்குக ளுக்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு உள்ளது. சாலை பைக்குகள் வேகம் மற்றும் செயல்திறனுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. இலகுரக பாரமின்றிய பிரேம்கள், குறுகிய டயர்கள் மற்றும் ஏரோடைனமிக் எனும் காற்றுடன் இயங்கும் நிலைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. அவை எமது பாதை பரப்புகளுக்கமைய பந்தயத்துக்கு ஏற்றவகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதற்கு நேர்மாறாக, ஹைப்ரிட் அல்லது மலை பைக்குகளை உள்ளடக்கிய நிலையான பைக்குகள் பொதுவாக பல்துறை மற்றும் வசதிக்காக உருவாக் கப்படுகின்றன, பல்வேறு நிலப்பரப்புகளுக்கு ஏற்றவை ஆனால் அதிவேக பந்தயத்துக்கு உகந்ததாக இல்லை. பந்தயங்களில் சிறந்து விளங்க விரும்பும் போட்டியா ளர்கள் சைக்கில்களிடையேயான இந்த வேறுபாடுகளைக் கவனத்தில் கொள்ளல் மிக முக்கியமானது.

உலகளவில், சைக்கிள் ஓட்டுதல் உதைபந்தாட்டத்துக்கு அடுத்த பெருந்திரளான ரசிகர்களை கொண்ட ஒரு விளையாட்டாகவும் ஐரோப்பிய நாடுகளில் ஒரு வாழ்க்கை முறையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதற்குச் சான்றாக டூவர் டி பிரான்ஸ் மற்றும் ஒலிம்பிக் போன்ற முக்கிய நிகழ்வுகள் சைக்கிலிங் எனும் விளையாட்டின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றன.

ஐரோப்பிய நாடுகளில் மிகவும் விலையுயர்ந்த விளையாட்டுகளில் ஒன்றாக கருதப்படும் சைக்கிளிங் ஆனது மில்லியன் கணக்கான ரசிகர்களையும் பங் கேற்பாளர்களையும் ஈர்த்துத் தன்னகத்தே ரசிகர்களாக கொண்டுள்ளது. உலகெங்கிலும் உள்ள நகரங்கள் சைக்கிள் ஓட்டுதலை ஒரு நிலையான போக்குவரத்தாக ஊக்குவிப்பதற்காக பைக் செல்ல பிரத்தியேக பாதைக ளுக்கென பல மில்லியன் டொலர்களைச் செலவு செய்வதோடு சைக்கிள் வாடகை சேவைகள், அனைத்து முக்கிய நிலையங்களிலும் சைக்கிள் காற்று நிரப்பும் கருவிகள் அதற்கான இலத்திரனியல் பாதுகாப்பு சேவை

தொடர்ச்சி▼

# அன்றாட வாழ்வியலுடன் இரண்டறக் கலந்ததுதான் சைக்கிள் பயணம்...!

தொடர்ச்சி▲

போன்ற உள்கட்டமைப்பிலும் முதலீடு செய்வதன் மூலம் சைக்கிள் ஓட்டுதலுக்கு ஏற்றவாறு தமது நகரங்களை மாற்றிக்கொண்டு வருகின்றன.

உலகெங்கிலும் உள்ள பல நாடுகளில் போக்குவரத்து, பொழுதுபோக்கு மற்றும் உடற்பயிற்சியின் நிலையான வடிவமாக சைக்கிள் ஓட்டுதல் குறிப்பிடத்தக்க முக்கியத் துவத்தைப் பெற்றுள்ளது. போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல், கார்பன் வெளியேற்றத்தைக் குறைத்தல், பொது சுகாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் நகர்ப்புற இயக்கத்தை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல காரணங்களுக்காக சைக்கிள் ஓட்டுதலை ஊக்குவிக்க பல்வேறு நாடுகள் கொள்கைகள் மற்றும் உள்கட்ட மைப்பை செயல்படுத்தியுள்ளன.

நெதர்லாந்து, டென்மார்க், ஜேர்மனி, பின்லாந்து, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் உள்கட்டமைப்பு மேம்பாடுகள் மற்றும் சைக்கிளின் நன்மைகள் குறித்த பொது விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மூலம் அரசுகள் சைக்கிள் பாவனையை ஆதரிக்கிறது. உலகிலேயே அதிக சைக்கிள் பயனர்களைக் கொண்ட நாடு நெதர் லாந்து ஆகும். இங்கு சுமார் 27 வீதமான பயணங்கள் சைக்கிள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த விரிவான சைக்கிள் கலாச்சாரம், நன்கு நிறுவப் பட்ட சைக்கிள் பாதைகளின் வலையமைப்பு, சைக்கி ளுக்கு ஏற்ற கொள்கைகள் மற்றும் இந்த போக்குவரத்து முறையை ஆதரிக்கும் ஒரு பொதுவான சமூக அணுகுமுறை ஆகியவற்றால் வலுவூட்டப்படுகிறது.

டச்சு வாழ்க்கை முறை, பயணத்துக்காக மட்டுமல் லாமல், ஓய்வு மற்றும் விளையாட்டுக்காகவும் சைக்கிள் ஓட்டுவதை ஏற்றுக்கொள்கிறது, இது அவர்களின் அன்றாட வாழ்க்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக அமையப்பெறுகிறது.

முடிவில், சைக்கிள் ஓட்டுதல் உடல் ஆரோக்கியம், சமூக மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு குறிப்பிடத்தக்க நன்மைகளைக் கொண்டுள்ளது. உள்ளூர் சைக்கிள் ஓட்டுதல் கலாச்சாரத்தை வளர்ப்பதில் ரைடர்ஸ் ஹப் போன்ற கழகங்களின் தாக்கம் விலை மதிப்பற்றது, மேலும் சைக்கிள் ஓட்டுதலுக்கான வளர்ந்து வரும் உலகளாவிய உற்சாகம் நவீன சமூகத்தில் அதன் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கிறது. அதிகமான மக்கள் சைக்கிள் ஓட்டுதலை ஏற்றுக்கொள்வதால், ஒட்டுமொத்த நல்வாழ்வை மேம்படுத்துவதிலும் சுற்றுச்சூழல் சவால்களை நிவர்த்தி செய்வதிலும் அதன் பங்கு தொடர்ந்து விரிவடையும் அதற்கு ஒத்துழைக்கும் வகையில் அரசாங்கம் சைக்கிளுக்கான பிரத்தியேக பாதைகள் அமைத்துக்கொடுப்பதோடு அதற்கென பிரத்தியேக சட்டதிட்டங்களையும் செயல்படுத்துவதன் மூலம் எமது நாட்டையும் சுற்றுச்சூழலையும் பாதுகாப் பதோடு சைக்கிலிங்கை ஒரு தேசிய ரீதியான விளை யாட்டாக மாற்ற முடியும்.

## கதிர்காமத்தில் தினமும் களைகட்டும் பெரஹரா!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் திருவிழாவை முன்னிட்டு வீதியுலா (பெரஹரா) தினமும் மனோரம்மியமான சூழலில் களைகட்டிய வருகிறது.

எதிர்வரும் 10 ஆம் திகதி இறுதி பெரும் வீதியுலா (மகா பெரஹரா) நடை பெறவுள்ளது.









# இந்தியா – அமெரிக்கா இடையே 10 ஆண்டு பாதுகாப்பு ஒப்பந்தம்

இந்த ஆண்டு இறுதிக்குள் 10 ஆண்டு களுக்கான பாதுகாப்பு கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியாவும், அமெரிக்காவும் ஒப்புக்கொண்டுள்ளன என அமெரிக்க மூத்த பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் கர்னல் கிறிஸ் டெவின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"செவ்வாயன்று (ஜூலை 1) நடைபெற்ற ஒரு தொலைபேசி உரையாடலின் போது, அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத்தும், இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கும் இந்த ஆண்டு இறுதியில் சந்திக்கும் போது புதிய கட்டமைப்பை இறுதி செய்து கையெழுத்திட ஒப்புக்கொண்டனர்.

பெப்ரவரி 2025 இல் ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் பிரதமர் மோடியின் கூட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பு இலக்குகளை அடைவதில் இரு நாடுகளும் அடைந்துள்ள கணிசமான முன்னேற்றத்தை பாதுகாப்பு அமைச்சர் ஹெக்செத் மற்றும் அமைச்சர் சிங் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

இந்தியாவுக்கு வழங்குவதாக அமெரிக்கா ஒப்புக்கொண்ட முக்கிய பாதுகாப்பு தளவாடங்கள் குறித்தும், இரு நாடுகளுக்கும் இடையே நெருக்கமான பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்தும் இருவரும் விவாதித்தனர்." என்று பென்டகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது குறித்து அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத்,

"ஜூலை 1 ஆம் திகதி, பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்குடன் பேசினார். தெற்காசியாவில் அமெரிக்காவின் முக்கிய பாதுகாப்பு பங்காளியாக இந்தியா திகழ்வதாகவும், எனவே, அமெரிக்கா இந்தியாவுக்கு முன்னுரிமையை அளிக்கிறது." என்று தெரிவித்தார்.

முன்னதாக, ஜூலை 1ஆம் திகதி ராஜ்நாத் சிங் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

"அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத்துடன் பேசியதில் மகிழ்ச்சி. இந்திய – அமெரிக்க பாதுகாப்பு கூட்டாண்மையை மேலும் ஆழப்படுத்தவும், திறன் மேம்பாட்டில் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், புதிய முயற்சிகளை மதிப்பாய்வு செய்யவுமான இந்த உரையாடல் சிறப்பாக இருந்தது.

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் அமெரிக்கா இந்தியாவுக்கு அளித்த அசைக்க முடியாத ஆதரவுக்கு எனது ஆழ்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். விரைவில் அவரைச் சந்திக்க ஆவலுடன் காத்திருக்கிறேன்." என்று தெரிவித்திருந்தார்.

# 500 வீத வரி அச்சுறுத்தல் குறித்து அமெரிக்காவிடம் கவலை தெரிவிப்பு

## மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் தகவல்



ரஷ்யாவுடன் தொடர்ந்து வர்த்தகம் செய்யும் நாடுகள் மீது 500 சதவீதம் வரி விதிப்பது தொடர்பாக எழுந்துள்ள அச்சுறுத்தல்கள் குறித்து அமெரிக்காவிடம் ஏற்கெனவே கவலை தெரிவித்துள்ளதாக மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"அமெரிக்க அரசு ரஷ்யா மீதான தடை தொடர்பாக புதிய மசோதாவை அறிமுகப்படுத்தியுள்ளது.

குடியரசுக்குக்சிசெனட்டர்லிண்ட்சேகிரஹாம் ஆதரவுடன் வெளிவந்துள்ள இந்த மசோதா ரஷ்யாவுடன் தொடர்ந்து வர்த்தகம் செய்யும் நாடுகள் மீது 500 சதவீத வரி விதிக்க வழிவகை செய்கிறது. ரஷ்யாவிடமிருந்து இந்தியா தொடர்ந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து வருகிறது.

இந்த நிலையில், இந்த புதிய தடை மசோதாவால் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் பெரிதும் பாதிப்படையும் சூழல் உருவாகியுள்ளது. எனவே இதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது இருதரப்பிலும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. " என்று குறிப்பிட்டுள்ளார்.

# நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதால் கேதார்நாத் யாத்திரை நிறுத்தம்

கனமழை காரணமாக உத்தராகண்ட் மாநிலத்தில் சோன்பிரயாக் அருகே நிலச்சரிவு ஏற்பட்டதால், கேதார்நாத் யாத்திரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

உத்தரகாண்ட் மாநிலத்தில் நேற்று முன்தினம் கனமழை பெய்தது. இதனால் சோன்பிரயாக் அருகேயுள்ள முங்காட்டியா என்ற இடத்தில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கேதார்நாத் யாத்திரையை மாவட்ட நிர்வாகம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.



கவுரிகுந்த் பகுதியிலிருந்து திரும்பிய சில பக்தர்கள் நிலச்சரிவு ஏற்பட்ட பகுதியில் சிக்கினர். அவர்களை மாநில பேரிடர் மீட்பு குழுவினர் பாதுகாப்பாக மீட்டு சோன்பிரயாக் அழைத்து சென்றுள்ளனர்.



# காசா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 94 பாலஸ்தீனர்கள் பலி

காசாவில் இஸ்ரேல் இராணுவம் நேற்று முன்தினம் இரவு நடத்திய வான்வழி தாக்குதலில், உதவிபெற காத்திருந்த 45 பேர் உட்பட 94 பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்.

இஸ்ரேல் பணயக் கைதிகள் சிலரை ஹமாஸ் அமைப்பினர் இன்னும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இவர்களை விடுதலை செய்துவிட்டு இருதரப்பும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வலியுறுத்தி வருகிறார். காசாவில் 60 நாள் யுத்த நிறுத்தத்துக்கு இஸ்ரேல் ஒப்புக் கொண்டுள்ளதாகவும், இதை ஹமாஸ் ஏற்றுக் கொள்ள வேண்டும் என அவர் கடந்த செவ்வாய்க்கிழமை கூறினார்.

ஆனால், ஹமாஸ் அமைப்பினர் இதை ஏற்றுக்கொள்ளாமல், உண்மையான யுத்த நிறுத்தத்துக்கு இது வழிவகுக்குமா என கேள்வி எழுப்பி வருகின்றனர். இதனால் காசாவில் இஸ்ரேல் இராணுவம் தனது தாக்குதலை தொடர்கிறது.

காசாவின் முவாசி பகுதியில் இஸ்ரேல் இராணுவம் நேற்று முன்தினம் இரவு மற்றும் நேற்று அதிகாலை நடத்திய வான்வழி தாக்குதலில் கூடாரங்களில் தங்கியிருந்த 15 பேர் உயிரிழந்தனர்.

காசாவில் பாடசாலை கட்டடம் ஒன்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. காசாவில் அறக்கட்டளை உதவி மையங்கள் உட்பட பல்வேறு பகுதிகளில் நிவாரணப் பொருள்கள் பெற காத்திருந்த 45 பேரும் இஸ்ரேல் தாக்குதலில் உயிரிழந்தனர். பல இடங்களில் நடைபெற்ற தாக்குதலில் மொத்தம் 94 பேர் உயிரிழந்தனர்.

ஆனால், இந்த தாக்குதல் குறித்து இஸ்ரேல் இராணுவம் எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. பொதுமக்களுடன் தங்கியிருந்து ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேலை நோக்கி ரொக்கெட் குண்டுகளை ஏவுவதாக இஸ்ரேல் இராணுவம் குற்றம்சாட்டியுள்ளது.

காசாவில் நடைபெற்ற தாக்குதலில் இதுவரை மொத்தம் 57,000 பேர் உயிரிழந்துள்ளனர்.



# சிக்காக்கோவில் துப்பாக்கி சூடு: 4 பேர் பலி; 14 பேர் படுகாயம்

அமெரிக்காவின் சிக்காக்கோவில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில், 4 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 14 பேர் வரை காயமடைந்துள்ளனர்.


இரவுநேர களியாட்ட நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றவர்கள், அங்கிருந்து வெளியேறிக் கொண்டிருந்தபோதே, இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இரவு 11 மணியளவில் மேற்படி இரவுநேர களியாட்ட நிலையத்தைக் கடந்து சென்ற சிற்றூந்து ஒன்றிலிருந்தே, இந்த துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் 24 வயதுக்கும் 27 வயதுக்கும் இடைப்பட்ட, நான்கு பேர் உயிரிழந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் தொடர்பில் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

அதேநேரம் இந்த சம்பவத்தின் பின்னணி குறித்தும் தகவல் வெளியாகவில்லை.





கனடா முரசு

பக்கங்கள் - 03


வெள்ளிக்கிழமை 04/07/2025

## கனடாவில் பரவலாக காட்டுத்தீ சம்பவங்கள்

அவசர நிலைகள் பிரகடனம்



C2



# கனடா விமான நிலையங்களுக்கு வெடிகுண்டு அச்சுறுத்தல் விடுப்பு

கனடாவின் பல்வேறு விமான நிலையங்களில் நேற்று வெடிகுண்டுத் தாக்குதல் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதை அடுத்து, பெருமளவான விமானங்கள், தாமதமாகவே சேவையில் ஈடுபட்டன.

ஒட்டாவா, மொன்றியல், எட்மொன்டன், வின்னிபேக், கல்காரி மற்றும் வான்கூவர் ஆகிய இடங்களில் உள்ள விமான நிலையங்களுக்கே இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஏர் கனடா விமான நிலையங்களின் வலைத்தளத்தில், ஏராளமான விமானங்களில் புறப்படும் நேரங்களில் ஒரு மணி நேரம் அல்லது அதற்கு மேல் தாமதம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், தற்போது நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளதாக கனேடிய தகவல்கள் கூறுகின்றன.

குண்டுத் தாக்குதல் அச்சுறுத்தல் தொடர்பிலான பின்னணி குறித்து எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை.

இதேவேளை, ஒட்டாவா பொலிஸார் நாட்டின்

தலைநகரில் உள்ள விமான நிலையத்தில் நடந்த பாதுகாப்பு அச்சுறுத்தல் சம்பவம் குறித்து விசாரித்து வருவதாக அறிவித்துள்ளனர்.




# கனடாவிலிருந்து விடுமுறைக்குச் சென்ற பெண் யாழில் இடம்பெற்ற வீதி விபத்தில் உயிரிழப்பு



கனடாவில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற பெண்ணொருவர் வீதி விபத்தில் உயிரிழந்த சம்பவம் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

கனடாவில் வசித்து வரும் 59 வயதான பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் கனடாவில் இருந்து விடுமுறைக்காக யாழ்ப்பாணம் சென்று கொடிகாமம் பகுதியில் தங்கியிருந்த நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி பெண் கடந்த 27 ஆம் திகதி பாண் வாங்குவதற்காக

C2



# கனடாவில் பரவலாக காட்டுத்தீ சம்பவங்கள்

## அவசர நிலைகள் பிரகடனம்

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா, யுகான் மற்றும் அல்பெர்டா என பல மாகாணங்களில் ஆங்காங்கே காட்டுத் தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதனால், அப்பகுதிகளில் அவசர நிலைகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

கனடா முழுவதும் தற்போது 465 காட்டுத் தீ சம்பவங்கள் இடம்பெறுவதாக கனடிய காட்டுத்தீ முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் 70 இற்கும் மேற்பட்ட காட்டுத் தீ சம்பவங்கள் ஏற்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் லைட்டன் பகுதியில் ஏற்பட்ட தீவிர காட்டுத் தீ காரணமாக பல குடியிருப்புகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

அங்கு அவசர நிலை அறிவிக்கப்பட்டு, மக்கள் வெளியேற்றப்படுவதை பொது பாதுகாப்பு அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அல்பெர்டா மாகாணத்திலும் காட்டுத் தீ அபாயம் நீடிக்கிறது. இங்கு 67 காட்டுத் தீக்கான நிகழ்வுகள் பதிவாகியுள்ளன. இதில் 18 தீ விபத்துகள் தற்போது கட்டுப்பாடற்ற நிலையில் உள்ளன.

பொது மக்களுக்கும், சுற்றுச்சூழலுக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் இந்த காட்டுத் தீ சம்பவங்களை கட்டுப்படுத்த தீயணைப்பு குழுக்கள் முழுமையான போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றன.

அவசர நடவடிக்கைகள், வெளியேற்ற உத்தரவுகள் மற்றும் பாதுகாப்பு எச்சரிக்கைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன என பொது பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.



**கனடாவிலிருந்து...**


**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

ஆட்டோவில் சென்ற போது வீதியால் சென்ற பட்டா ரக வாகனம் அவர் மீது மோதியது.

விபத்தில் படுகாயமடைந்த பெண் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கொடிகாம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி வின்சன் அன்ரலா மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



# ஒட்டாவா ஆற்றில் மூழ்கி தந்தை பலி; மகன் மீட்பு



ஒட்டாவா நகரில் உள்ள வெஸ்ட்பரோ கடற்கரைக்கு அருகே உள்ள ஒட்டாவா ஆற்றில் நீரில் மூழ்கி ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவருடன் இருந்த எட்டுவயது சிறுவன் பொது மக்களின் உதவியுடன் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை பிற்பகல் 1.40 மணியளவில் தந்தை மற்றும் மகன் தண்ணீரில் மூழ்கினர் என ஒரு அழைப்பு வந்ததை அடுத்து, முதலுதவிக் குழுக்கள் சம்பவ இடத்திற்கு விரைந்ததாக ஒட்டாவா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, சோனார் தொழில்நுட்பத்தின் உதவியுடன் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில், 2.25 மணியளவில் ஆண் ஒருவரது உடல் கண்டெடுக்கப்பட்டது என ஒட்டாவா தீயணைப்பு சேவையின் தலைவர் பால் ஹட் தெரிவித்துள்ளார்.

முயற்சிகள் பல செய்த போதும், அந்த ஆண் உயிரிழந்ததாக சம்பவ இடத்திலேயே அறிவிக்கப்பட்டது என ஒட்டாவா உயிர்காப்பு சேவை தெரிவித்துள்ளது. அந்தச் சிறுவனை அருகில் இருந்த பொது மகனொருவர் விரைவாக செயல்பட்டு மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். உயிராபத்து கிடையாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் வெஸ்ட்பரோ கடற்கரை பகுதியில் நேர்ந்ததல்ல என்றும் அங்கு பணியாற்றிய நகர காவலாளிகள் இதில் ஈடுபட்டிருக்கவில்லை எனவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

தந்தை மற்றும் மகன் ஏன் நீருக்குச் சென்றனர் என்பது இதுவரை தெரியவில்லை.

இந்த மிகுந்த வலி மிக்க தருணத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கிறோம்,என ஒட்டாவா பொலிஸார் செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

# கனடாவில் குடியுரிமை பெற்றுத் தருவதாக ஏமாற்றிய பெண்ணைத் தேடும் பொலிஸார்

கனடாவில் குடியேறிகளை ஏமாற்றி மோசடி செய்த பெண் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

டொரண்டோ நகரின் மிட்டவுன் பகுதியில் குடிவரவு சேவைகள் வழங்குவதாகக் கூறி பலரிடமிருந்து பணம் பெற்றுவிட்டு போலி ஆவணங்களை வழங்கியதாக 43 வயதுடைய மரியா கொர்பஸ்க்கு எதிராக மோசடி குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

2023 மே 31 முதல் 2025 மே 31 வரை இரண்டு வருட காலத்தில், கனடிய குடியுரிமை மற்றும் வேலை அனுமதிக்கான ஆவணங்களைத் தயார்



செய்வதாகக் கூறி பல நபர்களிடம் கொர்பஸ் பணம் பெற்றுள்ளார்.

பின்னர் அந்த ஆவணங்கள் அனைத்தும் போலியானவை என்பதை பாதிக்கப்பட்டவர்கள் அறிந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரியா கொர்பஸை மேலும் பலர் ஏமாந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். அவரை சட்டத்தரணியின் உதவியுடன் பொலிஸில் சரணடைந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

மேலும் தகவல் தெரிந்தவர்கள் டொரண்டோ பொலிஸாரைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.